DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 397 of 2022 |
| Deposition of witness | : | PW - 1 |
| Name | : | தமிம் அன்சாரி |
| Father Name | : | சாகுல் ஹமீது |
| Age | : | 28 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் வசித்து வருகிறேன். எலக்ட்ரீசியன் ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். முகம்மது ஷேக் சிந்தா மற்றும் அந்தோணி சதீஷ் ஆகியோரை எனக்கு தெரியும். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பாக சம்பவம் நடந்தது. நான் தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். என்னை சமாதானமாக செல்லுமாறு யாரும் வற்புறுத்தவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் நான் தான் எனது கைரேகையை வைத்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **சமாதான மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.)**

2. கடந்த 01.09.2020 ஆம் தேதி இரவு 21.45 மணியளவில் என் வீட்டின் முன்பு நான் நின்று கொண்டிருந்தபோது இந்த வழக்கின் ஆஜர் எதிரிகள் அங்கு வந்து என்னை கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசி, கல்லை எடுத்து அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், சாட்சி முகமது ஷேக் சிந்தாவை இந்த வழக்கின் 1 ம் எதிரி அப்துல் கரீம் வலது கையை கடித்து காயம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் மேற்படி சம்பவம் சம்பந்தமாக புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது நண்பர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.21 10:09:28 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 397 of 2022 |
| Deposition of witness | : | PW - 2 |
| Name | : | **முகமது ஷேக் சிந்தா** |
| Father Name | : | **சாகுல் ஹமீது** |
| Age | : | 24 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் வசித்து வருகிறேன். எலக்ட்ரீசியன் ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சிகள் தமிம் அன்சாரி மற்றும் அந்தோணி சதீஷ் ஆகியோரை எனக்கு தெரியும். இந்த வழக்கைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.)**

2. கடந்த 01.09.2020 ஆம் தேதி இரவு 21.45 மணியளவில் தமிம்அன்சாரி அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது இந்த வழக்கின் ஆஜர் எதிரிகள் அங்கு வந்து அவரை கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசி, கல்லை எடுத்து அடித்து காயம் ஏற்படுத்தியும், சாட்சி என்னை இந்த வழக்கின் 1 ம் எதிரி அப்துல் கரீம் வலது கையை கடித்து காயம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை

நான் பார்த்ததாக போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.21 10:09:37 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 397 of 2022 |
| Deposition of witness | : | PW - 3 |
| Name | : | **அந்தோணி சதீஷ்** |
| Father Name | : | **பால்துரை** |
| Age | : | 29 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.07.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் வசித்து வருகிறேன். சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். முகம்மது ஷேக் சிந்தா மற்றும் தமிம்அன்சாரி ஆகியோரை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.)**

2. கடந்த 01.09.2020 ஆம் தேதி இரவு 21.45 மணியளவில் தமிம்அன்சாரி அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது இந்த வழக்கின் ஆஜர் எதிரிகள் அங்கு வந்து அவரை கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசி, கல்லை எடுத்து அடித்து காயம் ஏற்படுத்தியும், சாட்சி என்னை இந்த வழக்கின் 1 ம் எதிரி அப்துல் கரீம் வலது கையை கடித்து காயம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை

நான் பார்த்ததாக போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.21 10:09:45 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 397 of 2022 |
| Deposition of witness | : | PW - 4 |
| Name | : | **சாகுல் ஹமீது** |
| Father Name | : | **ஹசன்** |
| Age | : | 63 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.07.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் வசித்து வருகிறேன். சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். முகம்மது ஷேக் சிந்தா மற்றும் தமிம்அன்சாரி ஆகியோரை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.)**

2. கடந்த 01.09.2020 ஆம் தேதி இரவு 21.45 மணியளவில் தமிம்அன்சாரி அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது இந்த வழக்கின் ஆஜர் எதிரிகள் அங்கு வந்து அவரை கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசி, கல்லை எடுத்து அடித்து காயம் ஏற்படுத்தியும், சாட்சி என்னை இந்த வழக்கின் 1 ம் எதிரி அப்துல் கரீம் வலது கையை கடித்து காயம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை

நான் பார்த்ததாக போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.21 10:09:53 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 397 of 2022 |
| Deposition of witness | : | PW - 5 |
| Name | : | சுதர்சன் |
| Father Name | : | தங்கராஜ் |
| Age | : | 55 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.07.2026.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்கிறேன். இந்த வழக்கினை பதிவு செய்த முதல் நிலை காவலர் திரு.சுந்தர் வழக்கினை விசாரணை செய்த குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் திரு.சந்திரகுமார் ஆகியோர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 02.09.2020ம் தேதி 15.30 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலர் சுந்தர் நிலைய பொறுப்பில் இருந்த போது ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று முகமுது சேக் சிந்தாவின் காய இன்டிமேசனை பெற்று தகவல் படி அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த முகமது சேக்சிந்தா மற்றும் தமிம் அன்சாரி ஆகியோர்களிடம் விசாரித்து தமிம் அன்சாரியிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் 16.30 மணிக்கு வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.429 /2020 இதச 294(பி), 323, 324 ஆக பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமுலம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஸ்ரீவைகுண்டம் அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

3. விசாரணை நகலை விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்ததை அவர் 02.09.2020 ம் தேதி 17.30 மணிக்கு சாட்சிகள் முகமு அசாருதின் மற்றும் உஸ்மான் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு பட்டியல் சாட்சி 1 முதல் 7 ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலை காவலர் திரு.சுந்தர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. விசாரணையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் 20.10.2020 ம் தேதி 17.00 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து பின் தக்க ஜாமின்தார்களுடன் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6. இவ்வழக்கில் காயம்பட்ட நபர்க்கு சிகிட்சை அளித்த ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திருமதி.வித்யா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். மருத்துவர் அளித்த **காயச்சான்றுகள் 2 எண்ணம் அ.சா.ஆ 6, 7ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. இத்துடன் தனது விசாரணையை முடித்து 20.10.2020 ம் தேதி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324 ஆக இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றம் அனுப்பியுள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சொன்னநேரத்தில் சொன்னவிதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1னிடம் எழுதப்படாத வெள்ளைதாளில் கையொப்பம் மட்டும் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. புகார்வாக்குமூலம் போலிசாரால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.21 10:10:03 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்